மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்.
முன்னிலை:– திருமதி.P. கோபால அரசி, B.Sc.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.
2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07 ஆம் நாள் சனிக்கிழமை.
அ.வ.எண்.84/2019.
CNR No.TNTT10000067 2019.

1. குமாரசாமி (இறப்பு)
2. சௌந்திரராஜன்
3. கந்தசாமி (இறப்பு)
4. ஆதிலிங்கம்
5. செந்தூர்பாண்டி ..வாதிகள்

/எதிர்/

1. S.A. உறிப்துல் கரீம்.
2. காமராஜ் .. பிரதிவாதிகள்

(இ.ம.எண்.653/2023 ல் 31.07.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி இறந்து போன 1ம் வாதியின் வாரிசுகளான 2 முதல் 5 வாதிகள் வழக்கின் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனர்)

(இ.ம.எண்.712/2023 ல் 28.08.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு படி பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டது)

இவ்வழக்கானது ஏற்கனவே 16.02.2021 அன்று வாதியின் வருகை தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டு, பின்பு இ.ம.எண்.145/2021 ல் 29.03.2021 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.இ. இராவணசிவன் அவர்களும், 1–ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திருவாளர்கள் ஜார்ஜ் A.H. வாசகன் மற்றும் A. ஜோ ஜெகதீஷ் ஆகியோரும், 2–ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.T. பஞ்சாப் சேகர் அவர்களும் ஆஜராகி, ஏற்கனவே 10.08.2021 அன்று, வா.சா.1, முதல் விசாரணை செய்யப்பட்டும், வா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டும், பின்பு 18.08.2021 அன்று வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 வரை குறியீடு செய்யப்பட்டும், வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு நிலுவையிலிருந்து வந்த

நிலையில், 21.03.2021 முதல், CRP(MD) No.488.2022 ஆனது, மாண்புமிகுளு மதுரை உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்து வருவதாக குறிப்புரைகள் தாக்கல் செய்யப்பட்டும், 30.06.2023 அன்று, வழக்கின் ஒரே வாதியான குமாரசாமி 09.05.2023 அன்று இறந்து விட்டதாக குறிப்புரை தாக்கல் செய்ப்பட்டும், இ.ம.எண்.653/2023 ல் 31.07.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவுப்படி இறந்து போன 1ம் வாதியின் வாரிசுகளான 2 முதல் 5 வாதிகள் வழக்கின் தரப்பினராக சேர்க்கப்பட்டும், பிராது சீர்திருத்தம் செய்யப்படுவதற்காக வழக்கு நிலுவையிலிருந்த நிலையில், 07.08.2023 அன்று, இ.ம.எண்.653/2023 மனுவின் 2ம் மனுதாரர் கந்தசாமி 01.08.2023 அன்று இறந்து விட்டதாக குறிப்புரை தாக்கல் செய்யப்பட்டும், இறந்து போன மேற்படி நபருக்காக நடவடிக்கை எடுப்பதற்காக வழக்கு நிலுவையிலிருந்த நிலையில், 23.08.2023 அன்று, 3ம் வாதியான கந்தசாமி திருமணமாகாமலும், வாரிசு இல்லாமலும் இறந்து விட்டதாகவும், அதனால் அவருக்காக நடவடிக்கை எடுக்க தேவை இல்லை என்றும் குறிப்புரை தாக்கல் செய்யப்பட்டு அது பதிவு செய்யப்பட்டும், இ.ம.எண்.653/2023 மனுவின் தொடர்ச்சியாக, இ.ம.எண். 712/2023 ல் 28.08.2023 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவு படி பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டும், வாதிகள் தரப்பு இதர சாட்சியத்திற்காக நிலுவையிலிருந்து வந்த இவ்வழக்கில் 07.10.2023 ஆகிய இன்று, வாதிகள் தரப்பில் பிரதிநிதித்துவம் இல்லாமலும், வாதிகள் அழைத்தும் ஆஜரின்றியும் இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

1. 1–ம் எதிர்வாதியால் 01.03.17–ல் ஏற்படுத்தப்பட்ட பதிவு செய்யப்படாத கிரைய ஆவணத்தினை சமூகம் நீதிமன்றம் குறிப்பிடுகிற தேதிக்கு 1&2 எதிர்வாதிகளை தனது வாதி பெயருக்கு கிரையப் பத்திரம்

பதிவு செய்து கொடுக்க உத்தரவிடும் படிக்கும், 28.12.17–ல் நாளிட்ட 2ம் எதிர்வாதி பெயரில் ஏற்பட்ட கிரையம் வாதியை கட்டுப்படுத்தக் கூடியதல்ல என விளம்புகை செய்யும் படிக்கும், வழக்கின் செலவுத் தொகைக்கும் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கேட்டு வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இன்று வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் பிரதிநிதித்துவம் இல்லை. மேலும் வாதிகள் அழைத்தும் ஆஜரில்லை. ஆகையால் வழக்கானது, வாதிகளின் வருகை தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

2023 ஆம் ஆண்டுஅக்டோபர் திங்கள் 07 ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(sd) P. Gopala Arasi, 07/10/2023.
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

<u>வாதிகள் தரப்பு சாட்சி:–</u>

வா.சா.1/திரு. குமாரசாமி (1வது வாதி)

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 01.03.2017 நாளிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது. | அசல் |
| வா.சா.ஆ.2 | 28.12.2017 அன்று 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரைய ஆவணம். | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 01.03.2017 அன்று 1ம் பிரதிவாதி வாதிக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்படாத கிரைய | அசல் |

| | | |
|---|---|---|
| | ஆவணம். | |
| வா.சா.ஆ.4 | 01.10.2018 நாளிட்ட உறுதிமொழி பத்திரம் | நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:–</u> இல்லை.

(sd) P. Gopala Arasi, 07/10/2023.
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மா.உ.நீ., சாத்தான்குளம்.
அ.வ.எண்.84/2019.

வரைவு/நேரிய தீர்ப்புரை.

நாள்:– 07.10.2023.